Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } சனோ 7-9-1946 ஆவணி 22உ { மலர் 45

## சில்லறைக் காசு

(“காலி மணிபர்ஸ்”)

### டாக்டர் உதவி தேவையா?

ஆவணி அவிட்டத்தன்று பூணூல் போடுவதைத்தான் கேட்டிருக்கிறேன், ஆரியர்களும் அவர்கள் சீடர்களும்! ஆனால் நம் தோழர்கள் அதே நாளில் தங்கள் பூணூல்களை அறுத்துவிட்டார்களாம்! இது ஒரு மாதிரியான கொண்டாட்டந்தான்! ஆரிய அடிமைச் சின்னங்களில் முதல்தரமான இந்தப் பூணூலை அறுத்தெறிவதற்கு ஆவணி அவிட்டம் வருகிற வரையிலா இவர்கள் காத்திருக்க வேண்டும்? நெற்றியிலிருக்கும் விபூதியையோ, நாமத்தையோ, அழிப்பது போலவே, எந்த நிமிஷத்தில் நினைக்கிறோமோ, அந்த நிமிஷத்திலேயே பூணூலை அறுத்தெறிய வேண்டியது தானே!

ஒஹோ! விஷயம் புரிகிறது! நம் தோழர்கள் சப்பையானவர்களா? ஆவணி அவிட்டத்தன்று ஏன் அறுத்திருக்கிறார்கள் தெரியுமா? அந்நாள் ஆயுள் முழுதும் ஞாபகத்திலிருக்க வேண்டுமே, அதற்காகத்தான்!

அதுமட்டுமல்ல! “ஓய்! பிராமணரே! ‘ஜாதி வேற்றுமை ஒழிய வேண்டும்! எல்லோரும் சகோதரர்கள்!’ என்று வாய்ச் சவடால் அடிக்கிறீரே! உம் தோளிலுள்ள பூணூலை மட்டும் அறுத்தெறியாமலிருக்கிறீரே!” என்று யாராவதொரு காங்கிரஸ்காரரைப்பார்த்துக் கேட்கவேண்டியிருக்கும்,

அப்போது அவர் கேட்பார், “நீர் செட்டியார்தானே! பூணூல் உண்டே! நீர் மட்டும் போட்டுக்கொள்ளலாமோ!” என்று.

“அடே! பைத்தியக்காரரே! நானும் இன்னும் 20 பேரும் சேர்ந்து 1946ம் வருஷத்து ஆவணி அவிட்டத்தன்றைக்கே அறுத்தெறிந்துவிட்டோமே! இது தெரியாதா? “விடுதலை”ப் பத்திரிகை படித்தால்தானே இதெல்லாம் தெரியும்?” என்று கூறலாமல்லவா?

பார்ப்பனத் தோழர்களுக்கு ஒரு வார்த்தை. பூணூலின் தத்துவம் உங்களில் எத்தனைபேருக்குத் தெரியுமோ? நான் சொல்லுகிறேன், கேளுங்கள்! மனம், வாக்கு, காயம்—ஆகிய மூன்றையும் கட்டுப்படுத்துவதின் சின்னமாகவே, முப்புரிகளைக் கொண்ட பூணூல் அணியப்படுகிறது, என்கிறது உங்கள் சாஸ்திரம்!

ஆனால் உங்களில் எத்தனைபேர் இம்மூன்றையும் கட்டுப்படுத்தியவர்கள்? அல்லது கட்டுப்படுத்த முயன்றவர்கள்? அல்லது, முயன்று வெற்றி பெற்றவர்கள்?

‘இராஜபார்ட்’ போட்டுக்கொண்டு நாடகத்தில் நடிப்பவன் மறுநாள் காலையில் அரை “கப்” காப்பிக்கு அலைச்சலாய் அலைகின்றான், பாவம்! அது இராத்திரி வேஷம்! ஆனால் நீங்கள் போடுவது பகல் வேஷமல்லவா?

உங்களில் எத்தனையோ பேர் யோக்கியர்களாக மாறவேண்டும் என்று நினைப்பவர்கள் இருக்கலாம்! அப்பேர்ப்பட்டவர்களாவது, பூணூலை அறுத்து, நெருப்பில் போடாவிட்டாலும், உங்கள் வீட்டில் துணி உலர்த்தவாவது கட்டிவையுங்கள்! உங்கள் விலாசத்தை மட்டும் எனக்கு அனுப்பினால் போதும்!

அன்னிபாட்டுத் துணியை அவிழ்த்து நெருப்பில் வீசிய தேசபக்த பிராமணர்களுக்கு, இது ஒரு பிரமாதமான காரியமாயிருக்க முடியாதே! ஒருக்கால் இப்படிச்செய்வதற்கு நடுக்கமாயிருக்கிறதோ? அப்படியானால், கண்ணை இறுக்கி மூடிக்கொண்டு, உங்களுக்குத் தோழராயுள்ள ஒரு சுயமரியாதைக்காரரைக் கூப்பிட்டுச் செய்யச் சொல்லுங்களேன்! அவர்கள் பூணூல், விபூதி, ருத்திராட்சம், நாமம் இந்த வேஷங்களைக் களைந்தெறிவதில் வீரர்கள்! ஆனால் மற்றவர்களுக்குமட்டும் தொல்லை கொடுக்கமாட்டார்கள்!

இவர்கள் ஹிந்து சமுதாயத்தின் டாக்டர்கள்! நீங்கள் விரும்பிக் கூப்பிட்டால் உதவிக்கு வருவார்கள்! டாக்டர்கள் கட்டியை அறுப்பது போல், பூணூலை மட்டுமல்ல, குருட்டு நம்பிக்கைகள் எதையும் ஒரே நிமிஷத்தில் அறுத்தெறிவார்கள்! உதவி தேவையானால், கூப்பிடுங்கள்!

0 0

### புலி குறுக்கிடும் சகுனம்!

சகுனம் பார்க்கும் வழக்கம் எனக்குக் கிடையாது. சுமார் 20 வருஷங்களாகவே கிடையாது. அதற்கு முன்புகூட அவ்வளவு கண்டிப்பாய் இருந்ததாக ஞாபகமில்லை. உங்களில் எத்தனைபேர் சகுனம் பார்க்கிறீர்களோ, எனக்குத் தெரியாது.

ஒற்றைப்பிராமணன் எதிரே வந்தால் கெட்ட சகுனமாம்; இரட்டைப் பிராமணன் வந்தால் நல்ல சகுனமாம்! பார்ப்பான் தனியே வந்தால் எதிரிகள் ஏதேனும் செய்துவிட்டால் என்ன செய்வது, என்று பயந்திருந்த அந்தக் காலத்தில் ஏற்பட்டதுதானே! ஒருவருக்கு இருவராயிருந்தால் ஏதோ, கொஞ்சம் தைரியமாக வருவது இருக்காதா, என்ற நினைப்பில் எழுதி வைத்திருக்கலாம்!

காலந்தான் மாறிவிட்டதே! எத்தனை பிராமணர்கள் சேர்ந்து வந்தால்தான் இன்று என்ன செய்ய முடியும்! ஒன்று மூவர்களைக்கொண்டு பிடித்துக்கொண்டு வரவேண்டும்! அல்லது பிரிட்டிஷ் துப்பாக்கிக்குப் பின்னால் வரவேண்டும்! அல்லது "கடவுள்" என்ற "அனுக்குண்டு"க்கு முன்னால் வேதம் படித்துக்கொண்டு வரவேண்டும்! அல்லது, கம்பர் மகா நாட்டு ஊர்வலத்தின் நடுவில் வர வேண்டும்!

இன்னொரு நல்ல சகுனமிருக்கிறது, பஞ்சாங்கத்தில்! சகுனத்தில் நம்பிக்கையுள்ளவர்களைக் கண்டால், கட்டாயம் கவனித்து ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்!

அது என்ன தெரியுமா? புலி இடமிருந்து வலமாகப் போனால் நல்ல சகுனமாம்! யாருக்கு நல்ல சகுனம்? புலிக்கா, சகுனம் பார்த்துப் போகிறவனுக்கா, என்று பஞ்சாங்கத்தில் கூறவில்லை! "நாமாகக் கட்டாயப் படுத்திச் செய்யக்கூடாது" என்று சகுன நம்பிக்கைக்காரர்கள் சொல்லுவார்கள். அப்படியானால், புலிகள் தாராளமாக நடமாடும் பகுதிகளுக்காவது போய் பரீட்சைப் பார்த்து வரச்சொன்னால்தான் நல்லது!

நம் முன்னோர்கள் எழுதியதெல்லாம் பொய்யாகாது! சும்மா போய் வரச்சொல்லுங்கள்! அல்லது, போகச் சொல்லுங்கள்!

## திருச்சி மாவட்ட நிதி வசூல் கூட்டம்

பெருமக்களே!

ஆலங்குடி வட்டத் திராவிட கழகச் செயற்குழு 8-9-46 ஞாயிறன்று மாலை 3 மணிக்குப் பூவாளூரில் என் பட்டறையில் கூடுகிறது. அப்போது "சென்னை மாநிலத் திராவிடர் கழக நிதி" திரட்டுவது குறித்தும், திராவிட இளைஞர் மாநாடு கூட்டுவது குறித்தும் ஆராயப்படும். கழக உறுப்பினர் யாவரும் தவறாது வரவேண்டுகின்றேன். அன்று மாலை மாபெரும் பொதுக்கூட்டமும் உண்டு.

சின்னதுரை, செயலாளர்,
திராவிடர் கழகம், பூவாளூர்.

## வருந்துகிறோம்

28-8-46 காலை 6-30 மணிக்கு திருச்சங்கோடு பள்ளிக்கார் மில்ஸ் மேனேஜிங் ஏஜெண்ட் தோழர் வி. வி. சி. ஆர். வையாபுரி முதலியார் அவர்கள் மருமகளும், இவ்வூர் திராவிட கழகப் பொருளாளர் தோழர் ஆர். வி. பொன்னுசாமி அவர்களின் மனைவியாருமான தோழியர் ருக்மணி அம்மையார் பிரசவத்தால் உயிர் நீத்தார் என்ற செய்தியைக் கேட்டு திராவிடத் தோழர்களாகிய நாங்கள் மிகவும் வருத்தப்படுவதுடன் எங்கள் அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம், என்று தோழர் கே பாமசிவம் அறிவிக்கின்றார்.

## காதணி விழா

கோபிசெட்டிபாளையம் தங்கமணி ஏஜெண்ட், தோழர் எ. ராமசாமி அவர்களின் மகள் மீனாட்சிக்கு 1-9-46ல் நடைபெற்ற காதணிவிழாவின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்காக மூன்று ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

## அறிவிப்பு

"குடி அரசு" வாரப்பத்திரிகையும் மற்றும் நமது இயக்க நூல்களும் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

வ. இராமன்,
திராவிடர் கழகம், திருப்பூர்.

## பிறப்பு

சென்ற ஆண்டில் பெரியார் தலைமையில் தன்மானத் திருமணம் செய்து கொண்ட திருவத்திபுரம் தோழர் தணிகை உலகநாதன், கமலா அவர்கட்கு 30-8-46ல் ஒருபெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு நாகம்மையார் என்னும் பெயர் சூட்டப்பட்டது. குழந்தை பிறந்ததின் நினைவாக பெரியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் நாகம்மையார் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் திருவத்திபுரம் தோழர் மாவண்ணா தேவராசன் அவர்களால் இயற்றப்பட்டு விரைவில் வெளிவரும்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வேக்களையும், வீடு வாசல்களையும், பாங்குகளையும் சொந்தமாக ஆண்டுவரப் போகின்றார்கள். ஆனால் கோடானுகோடி மக்களோ, இவை ஏதுவும் சொந்தமின்றி, உண்ண போதுமான உணவின்றி, அறிவு விளங்க சரியான கல்வி இன்றி, மக்களை வளர்க்க சுகாதார வீடின்றி, போதுமான கூலியின்றி, வேலை நிச்சயமின்றி உழைத்துவரப்போகின்றார்கள். காங்கிரசார் சுயராஜ்யத்தில் அது தான் சிலருக்கு வரப்போகும் நற்பாக்கியம். இதுதான் பெரும்பான்மையோருக்கு வரும் துர்பாக்கியம்.

ஆதலால், இந்த துர்பாக்கிய நிலைமை மாறி எல்லா மக்களும் சரி சமத்துவமாக வாழ வேண்டுமானால், சமதர்ம ராஜ்யத்தில் ஒன்றில்தான் முடியும். ஆதலால், தோழர்களே! இந்த சமதர்ம ராஜ்யம் (Socialism) வேண்டுமா என்று கேட்கின்றேன். இனி சமதர்ம ராஜ்யத்தை விளக்குவோம்.

(தொடரும்)

"தமிழ் உலகம்"

சிறந்த தமிழ் வெளியீடு

அகில உலகத்தமிழ்க் குலத்தின் அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்கென ஆரம்பத்தில் மாதமிரு முறையாகக் காஞ்சிபுரத்திலிருந்து விரைவில் வெளிவரும்.

தொகுப்பாளன்: அவில்தார் காஞ்சி. பால. தண்டாயுதபாணி.

# நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A., B.L.)

உலகிலுள்ள எல்லா சுயராஜ்ய அரசுகளும், மதங்களைத் தழுவி நிற்பதற்குக் காரணம் என்னவெனில், மதங்கள் யாவும் தேசிய அரசை ஆதரிக்கின்றன. இரண்டாவது, மதங்களின் ஸ்தாபனங்களில், அரசு புரிவோருக்கு மிக்க செல்வாக்குண்டு. மூன்றாவது, அரசு புரியும் வகுப்பாருக்கு, பாமர மக்கள் மூடராய் இருக்கவேண்டியது அவசியமாகும். நான்காவது, மூடப்பழக்க வொழுக்கங்களிலிருந்து பொதுமக்கள் விடுபட்டுத் தெளிவடைந்தால்; தங்கள் அரசியல் ஆதிக்கத்திற்கு இடையூறு ஏற்படுமென்றபயம் எல்லா அரசுகளுக்கும் இருந்து வருகின்றது. ஐந்தாவது, இத்யாதி காரணங்களால் தேசிய ராஜ்யங்களில் மதங்களும் மூட வழக்கங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆறாவது, எல்லா சுயராஜ்யங்களிலும் ஜாதி வேற்றுமை, இன வேற்றுமை இருந்தே தீரும். ஏனெனில் எல்லா தேசிய நாட்டிலும், முதலாளியென்றும், தொழிலாளியென்றும் வித்தியாசமிருந்து வருவதாலென அறிக. உயர்ந்தவன் (Lord), பிரபு (Zamindar) ஒரு பக்கமும், தாழ்ந்தவன், பறையன், பள்ளன் மற்றொரு பக்கமும், எந்த சுயராஜ்யத்திலும் இருந்தே வருவார்கள். ஜன சமூகத்தில் இந்த ஜாதி வேற்றுமைகளும் சமயவேற்றுமைகளும் இருந்தால்தான், முதலாளி அரசு நிலைத்து செழிக்க முடியும். இந்த இனவேற்றுமை எந்த தேசிய நாட்டிலுமுண்டு.

அப்படியிருக்க, நமது காந்தியார் சுயராஜ்யத்தில் மாத்திரம் இந்த இன வேற்றுமை, ஜாதி வேற்றுமை இல்லாமற் போகுமா? அது ஒருபோதுமில்லை. நமது காந்தியார் தீண்டாமை ஒழிய வேண்டுமென்கிறாரே ஒழிய, ஜாதி ஒழியவேண்டுமென்று சொல்வதில்லை. அவனவன் அந்தந்த ஜாதி வேலையைச் செய்யவேண்டுமென்று காந்தியாரும் கூறுகின்றார். இதைத்தான் 'பகவத்கீதையும்' கூறுகிறது. 'பகவத்கீதையைக்' காந்தியார் தன் வேதமென்றும் கூறுகின்றார். ஆனால் 'பகவத்கீதை' ஜாதியை பலப்படுத்த உண்டான நூலென அறிதல் வேண்டும். அதனால்தான் காந்தியாரும், அந்நூலை ஆதாரமாகக் கொள்வது. வேதங்களையும், புராணங்களையும், பகவத்கீதையையும் அதிகாரமாகக் கொண்ட சுயராஜ்யத்தில், ஜாதியெங்ஙனம் ஒழியும்? சமயங்கள் எவ்வாறு ஒழியும்? பிராமணன் இருக்கும் வரை, பறையன் ஒழியமாட்டான், பறையன் இருக்கும்வரை, பிராமணனும் ஒழியமாட்டான். தீண்டாதாரை கோவிலில் விட வேண்டுமென்பதெல்லாம் ஓர் குயுக்தியென அறிக. காந்தியார் சுயராஜ்யத்தில் அவர் உண்ணாவிரதத்திற்கிணங்கி தீண்டாதாரை கோவிலில் பிரவேசிக்க அனுமதித்தபோதிலும் அல்லது ஹரிஜனனென்றும், தரித்திர நாராயணனென்றும் தீண்டாதாரை இந்த மாயப் பேர்களால் அழைத்த போதிலும் பறையனும் பள்ளனும், பறையனாகவும், பள்ளனாகவுமே அழைக்கப்படுவர்; அதற்குச் சந்தேகமில்லை. நூலை அறுக்காத காங்கிரஸ்காரன் இருக்கும் வரையில், பறையனென்றும், பள்ளனென்றும், சர்க்கார் ரிகார்டுகளில் பதியும் வரையில், "தீண்டாமை ஒழிக" என்பதெல்லாம் வெறும் வேஷமெனவறிக. (This is nothing but a big camouflage) இது பெரும் மயக்கமேயொழிய வேறில்லை;

## சுயராஜ்யமும் பொருளாதாரமும்

எல்லா சுயராஜ்ய தேசங்களிலும் ஆட்சி புரிவோரிடத்தே எல்லா பொருளாதார செல்வாக்கும் இருந்துவரும். ஆதிக்கத்திற்கு அடையாளம் செல்வமாகும் (Wealth). அரசுபுரிவோருக்கும் ஆதிக்கம் வேண்டும். இந்த ஆதிக்கத்திற்கே, எல்லா செல்வத்தையும், அரசுபுரிவோர் தங்கள் கைக்குள் அடக்கி வைத்து இருக்கவேண்டி வருகிறது. பொதுவாகக் கருத வேண்டிய செல்வங்களாகிய நிலம், நீர், சுரங்கம், தொழிற்சாலை, ரயில், கப்பல், வீடு, மனை, கல்வி, பாங்கு முதலிய யாவும் அரசுபுரியும் இனத்தார் (Ruling Classse) கையில் இருந்தே வரும். அமெரிக்க அரசும், பிரெஞ்சு அரசும், ஜெர்மனி அரசும், பிரிட்டிஷ் அரசும் மற்றுமுள்ள பெரிய சிறிய முதலாளி அரசுகளும், சொந்த நாட்டின் பெரும்பான்மையான பொதுச் சொத்துக்களைக் கைக்கொண்டே இருக்கின்றன. மிகுதியான சொத்துகள் யாவற்றிற்கும் அவ்வரசுகளில் ஆட்சிபுரிபவர்களே உரியவர்களாக இருந்துவருகின்றார்கள். இவ்வுரிமையால்தான் மற்ற பெரும்பான்மை குடிமக்களாகிய பொருளற்றோரை–

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் செப்டம்பர் 7௳

# காங்கரசும் இடைக்கால சர்க்காரும்

இடைக்கால சர்க்கார் ஏற்பட்டுவிட்டது. சுயராஜ்ய அறையின் சாவி இந்தியர்களின் கையில் கொடுக்கப்பட்டு விட்டதெனப் பேசப்படுகின்றது. அதைப்பற்றி நாட்டிலே உலவி வரும் ஏடுகள் தலையங்கம் தீட்டுகின்றன. 'வெள்ளையர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறுவதற்குத்தங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இலண்டன்மாநகரத்தை நோக்கிக்கொண்டிருக்கின்றனர் என்று பறைசாற்றப்பட்டு வருகின்றது. காங்கிரஸ் இயக்கத்தின் சர்வாதிகாரியான காந்தியார் முதற்கொண்டு எல்லா காங்கிரஸ்காரர்களும் 'வெள்ளையர்கள் நல்லவர்கள், இந்தியர்களின் நலத்திலே நன்னோக்கங் கொண்டவர்கள்' என்று மனமுவந்து வாய்மலர்ந்தருள்கின்றனர். ஏற்பட்டிருக்கும் இடைக்கால சர்க்கார் நேருவின் சர்க்கார் என்று சங்கநாதமும் முழக்கப்படுகின்றது.

கொடி தூக்கும் குப்பனும், ஜே போடும் செங்கானும், தலையாட்டும் தங்கமும், சுயராஜ்யம் வந்துவிட்டதாகவே கனவு காண்கின்றனர். அக்கனவின் விளைவால் அவர்கள் கண்டதெல்லாம் உளறி கொம்மாளமடிக்கின்றனர். காப்பிக்கடை கிட்டய்யர் தன் எதர்க் குன்லையை நன்றாக வெளுத்து, தலையிலே அணிந்துகொண்டு சற்று கர்வத்துடனேயே காப்பி வழங்குகின்றார். காரணம் காமராசர் விடுத்த கணையால் ஓரளவு செல்வாக்குக் குன்றியவராகக் கருதப்பட்ட ஆச்சாரியாருக்கு இடைக்கால சர்க்காரில் உறுப்பினர் பதவி கிடைத்திருப்பது தான்.

ஆனால் உண்மையில் நடந்திருப்பது என்ன?

"1935ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசாங்க சட்டத்தின் திட்டங்களுக்குட்பட்டே இன்று இடைக்கால சர்க்கார் வேலை செய்யும்; என்னுடைய இடைக்கால சர்க்காரின் உறுப்பினர்களில் ஒருவரான பண்டித ஜவகர்லால் நேருவை என்னுடைய இடைக்கால சர்க்காரின் உபதலைவராக நியமித்துள்ளேன்' என்று வெள்ளையாக விளம்பிவிட்டார் வேவல் துரைமகனார். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்ன? வைஸ்ராய் பிரபுவாகிய வேவல் தான் இடைக்கால சர்க்காரின் தலைவர் என்பது வெள்ளிடைமலைபோல் தெரிகின்றது. மேலும் இடைக்கால சர்க்காரில் அங்கம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மன்னர் பிரானால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது. "இடைக்கால சர்க்கார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மன்னருக்குக் கட்டுப்பட்டது; அந்த ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக இருந்து வேவல் இடைக்கால சர்க்காரைக் கண்காணித்துவருவார்" என்றும் அறிவிக்கப்படுகின்றது.

மேற் குறிப்பிட்ட அறிக்கைகளால் ஜவகரும் அவர் சகாக்களும் இடைக்கால சர்க்காரின் உறுப்பினர்கள் என்பதும், இடைக்கால சர்க்காரின் நடவடிக்கைகள் இந்தியாவின் வைஸ்ராயிக்குக் கட்டுப்பட்டவைகள் என்பதும், நேரு இடைக்கால சர்க்காரின் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் நன்கு புலப்படும்.

உண்மை இவ்வாறிருக்க தேசிய ஏடுகளும், தேசியத் தோழர்களும் இடைக்கால சர்க்கார் நேருவின் சர்க்காரென்றும், அதன் தலைவர் நேரு என்றும் கூக்குரலிடுவதில் என்ன பொருள் இருக்கிறது என்று கேட்கின்றோம். நேரு இடைக்கால சர்க்காரின் பிரதம மந்திரி என்று சிலர் கூசாமல் கூறுகின்றனரே! இவர்களுக்கு உபதலைவர் என்பதற்கும், பிரதம மந்திரி என்பதற்கும் வேறுபாடு தெரியவில்லையா என்று கேட்கின்றோம்.

எதாவது தப்புப் பிரச்சாரம் செய்து பாமரமக்களை ஏய்ப்பதற்காகவா இடைக்கால சர்க்கார் நேருவின் சர்க்கார் என்று பேசப்படுகின்றது? அங்கு நடைபெறப்போகும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் வைஸ்ராய் துரைக்குத் திருப்தியளிக்கு முறையில் இருக்கவேண்டுமென்பதற்காகத்தானே வைஸ்ராய் இடைக்கால சர்க்காரின் தலைவராக வீற்றிருக்கின்றார்! துரையின் விருப்பத்திற்கிணங்கி செய்யப்படும் சீர்திருத்தம் உள்ளபடியே நாட்டிற்கு நன்மை விளைவிக்குமா என்று கேட்கின்றோம்.

வெள்ளையன் வெளியேற வேண்டும் என்று கிளர்ச்சி செய்த ஆகஸ்டு தியாகிகள் இன்று வெள்ளையனுடன் சமத்துவமாக ஆட்சி மன்றத்தில் அமர்ந்துகொண்டு ஏதேதோ கபட நாடகம் நடிக்கின்றனர்!

மேலும், இராணுவம், இந்திய சமஸ்தானங்களைப் பற்றிய இலாகா, கவர்னர் ஜனரல் மாகாண கவர்னர் ஆகியோரிடமிருக்கும் உறவு சம்பந்தப்பட்ட

## சுலோச்சனா—சம்பத்

### பதிவுத் திருமணம்

திருப்பத்தூர் வழக்கறிஞர்
தோழர் G. சாமிநாயுடு B.A., B.L. அவர்கள் மகள்
தோழியர்

**S. சுலோச்சனா அவர்களுக்கும்**

ஈரோடு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள்
மூத்த மகன் தோழர்

**E. V. K. சம்பத் அவர்களுக்கும்**

15-9-46ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு

முன்னாள் அமைச்சர், வழக்கறிஞர்
தோழர் S. முத்தையா முதலியார் அவர்கள்
தலைமையில்

திருப்பத்தூரில் (வடாற்காடு) மணமகள் இல்லத்தில்
பதிவுத் திருமணம் நடைபெறும்.

சீர்திருத்த இலாகா, அகில இந்திய சர்விஸ்களைக் கையாளும் கவர்னர் ஜெனரல் காரியாலயம் முதலியவைகள் இடைக்கால சர்க்காரின் கட்டுப்பாட்டின் கீழ் இராவென்றும் சொல்லப்படுகின்றது.

நாட்டின் முக்கியமான நிர்வாகப் பிடிப்புகளை வெள்ளையன் தன் கையில் வைத்துக் கொண்டான்.

"இடைக்கால சர்க்காரை ஏற்படுத்தி இந்தியர்களிடத்தில் அரசாட்சியை ஒப்படைத்து விட்டோம்; ஆனால் அவர்களுக்கு நாட்டை நன்றாக ஆளத்தெரிகிறவரையில் நாங்கள் உதவியாளராக அவர்களுக்கு இருப்போம்" என்றுகூறி உலக மக்களை ஏய்ப்பதற்குத்தான் வெள்ளையன் இடைக்கால சர்க்கார் நாடகத்தை நடித்துக் காட்டுகின்றானே யொழிய மற்றபடி ஆட்சியை அப்படியே இந்தியர்களிடம் ஒப்படைத்து விடவில்லை.

எனவே "இந்த இடைக்கால சர்க்கார் ஏதோ பிரமாதமாக நாட்டிற்குச் சாதிக்கப்போகிறது என்று பொதுமக்கள் ஏமாறாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

இனி, இந்த இடைக்கால சர்க்கார் நேர்மையான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை நோக்குவோம். இடைக்காலசர்க்கார் 10கோடி மக்கள் கொண்ட முஸ்லிம் சமுதாயத்தையே புறக்கணித்துள்ளது. அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்படுவதற்கு அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க காங்கரஸ்காரர்கள் மறுக்கின்றனர். அங்ஙனம் மறுத்ததின் காரணத்தால் இன்று முஸ்லிம் லீகர்கள் இல்லாமலேயே இடைக்கால சர்க்கார் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் ஒத்துழைப்பில்லாமல் ஏற்படுத்தப் பட்டிருக்கும் இடைக்கால சர்க்கார் நீடித்திருக்குமாவென ஐயுறவேண்டியிருக்கின்றது. முஸ்லிம் லீகர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இடைக்கால சர்க்காரில் சேர்ந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் தங்கள் குறிக்கோள் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ள அவர்கள் ஏமாந்தவர்களா என்ன?

"நாங்கள் முஸ்லிம் லீகர்களுடன் ஒத்துழைக்கத் தயார்; நாங்கள் முஸ்லிம் லீகர்களை இடைக்கால சர்க்காரில் சேர்த்துக்கொள்கிறோம்; ஆனால் முஸ்லிம்கள் ஒத்துழைக்க முன்வரவில்லை" என்று உலகத்தை ஏய்ப்பதற்காகவே காங்கரஸ்காரர்கள் இவ்வண்ணம் வெள்ளையனுடன் சேர்ந்துகொண்டு பேசி வருகின்றனர்.

மேலும் "முஸ்லிம்கள் இடைக்கால சர்க்காரில் சேராத காரணத்தால் முஸ்லிம் சமுதாயத்திற்கே ஆபத்து வந்துவிடும்; அவர்கள் வெள்ளையர்களுடனும், இந்தியர்களுடனும் விரோதம் பாராட்டுகின்றனர்; இருவருடனும் விரோதம் பாராட்டினால் அவர்களின் நிலைமை மோசமாகிவிடும்" என்று காந்தியார் முதல் கொண்டு எல்லா காங்கரஸ்காரர்களும் பேசுகின்றனர். இப்படிப்பட்ட பூச்சாண்டி மிரட்டல்களுக்கு முஸ்லிம் லீகர்கள் பயந்தவர்களல்ல என்பதை மிக விரைவில் மெய்ப்பித்துக் காட்டுவார்கள் என்பது உறுதி.

இத்திங்கள் 8ம் நாள் முஸ்லிம் லீகின் செயற்குழு கூட்டம் நடைபெறப் போகின்றது. அப்போது என்ன முடிவு செய்கின்

றனர் என்பது நமக்குத் தெரியாது. இருந்தபோதிலும் இன்றைக்கு இருந்துவரும் இடைக்கால சர்க்காரால் முஸ்லிம்கள் பாதிக்கப்படுவர் என்பதை உணர்ந்த அவர்கள் ஏதாவதொரு நல்ல முடிவிற்கு வந்து தங்கள் குறிக்கோளை நிறைவேற்றத் திட்டம் வகுப்பர் என்பது உறுதி.

மேலும், காங்கரஸ்காரர்கள் முஸ்லிம்களிடத்தில் ஏதாவதொரு காரணத்தை வைத்துக்கொண்டு நேரிடையான போருக்குச் சென்றாலும் செல்வர். அங்ஙனம் சென்று அதை இந்து முஸ்லிம் கலவரம் என்று தப்புப் பிரசாரம் செய்து இந்துக்களின் நன்மைக்காகவென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள இடைக்கால சர்க்காரைக்கொண்டு முஸ்லிம்களை நசுக்கக்கூட திட்டம் போடுவர். இன்று நாட்டிலே நடைபெற்ற பல சம்பவங்கள் இதற்குத் தக்க சான்று பகரும். எனவே முஸ்லிம்கள் இப்படிப்பட்ட சூழ்ச்சிகளுக்கெல்லாம் ஆளாகாமல் இருப்பதற்கு அவர்கள் தலைவர் தக்க திட்டம் வகுத்துத் தருவார் என்பது உறுதி.

இன்னும் ஆறுகோடி மக்களைக்கொண்ட தாழ்த்தப்பட்டோர் சமுதாயத்திற்கும் இடைக்கால சர்க்காரில் தக்க பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. எனவே வெள்ளையனைத் தலைவனாகக் கொண்ட இடைக்கால சர்க்காரால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நன்மையில்லை என்பதை உணர்ந்த அவர்கள் தங்கள் குறிக்கோளை அடைவதற்கு நாட்டிலே கிளர்ச்சி செய்வர் என்பது உறுதி.

4½ கோடிமக்களின் நன்மைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் திராவிடர் கழகத்தார் இடைக்கால சர்க்காரால் திராவிடர்களுக்கு நன்மை ஏற்படாது என்பதை உணர்ந்துவிட்டனர். எனவே அவர்களின் உண்மையான குறிக்கோளை அடைவதற்கு ஏதாவதொரு திட்டத்தை அவர்கள் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களைக்கொண்டு வகுத்து நேரிடையான நடவடிக்கைகளில் இறங்குவார்கள் என்பதும் உறுதி.

இதே மாதிரியாகப் பார்க்குங்கால் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இடைக்கால சர்க்காரால் காங்கரஸ்காரர்களைத் தவிர வேறு எந்தக் கட்சியினருக்கும் பலனேற்படாது என்பதைப் பல கட்சியினரும் உணர்ந்துவிட்டனர். அதுமாத்திரமன்றி காங்கரஸ்காரர்கள் ஏனைய கட்சியை நசுக்க மறைமுகமாகத் திட்டம் போட்டு வேலைசெய்வதையும் உணர்ந்துவிட்டனர்.

காங்கரஸ் இயக்கம் பணக்காரர்களுக்கும், முதலாளிகளுக்கும், உயர்ந்த சாதிக்காரர்களுக்கும் புகலிடமாய் விளங்கும் ஓர் கட்சி யென்றும், பணச்செல்வாக்கு மிகுதியாக இருப்பதின் காரணமாக அக்கட்சியினர் எதை வேண்டுமானாலும் செய்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பாடுபடுவார்கள் என்றும் நாம் அடிக்கடி கூறிவந்துள்ளோம்.

அதற்கேற்ப இன்று நாட்டில் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இன்று வெள்ளையனை ஆலிங்கனம் செய்துகொண்டு ஆட்சி மன்றத்தில் அமர்ந்து தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்திவருவதே நாம் கூறும் உண்மைக்குத் தக்க சான்றாகும்.

எனவே இந்தியா என்ற உபகண்டத்திலுள்ள காங்கரஸ் கட்சியை யொழிந்த மற்றெல்லாக் கட்சியினரும் தங்கள் குறிக்கோளை அடைவதற்கு, உண்மையான சுதந்தரத்தை அடைவதற்கு, நல்லதொரு திட்டம் வகுத்து ஆவன புரிவார்களாக.

## ஈரோட்டில் தடை உத்திரவு

ஈரோடு முனிசிபல் எல்லைக்குள்ளும், ஈரோடு ரயில்வே காலனி எல்லையிலும் டை ரயில்வே காலனிக்குப் போகும் மார்க்கங்களிலும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் முதலியன நடத்தவோ, ஏற்பாடு செய்யவோ விரும்பினால் 48மணி நேரத்திற்கு முன்னதாக ஈரோடு போலீஸ் டிப்டி சூப்பிரெண்டெண்டெண்டு அவர்களிடம் உத்திரவுபெற வேண்டுமென்று 6-9-46 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வுத்திரவு 2மாதம் வரை நீடிக்குமாம்.

## திருமணம்

30-8-46ல் காஞ்சிபுரத்தில் தோழர் அ. க. தங்கவேலர் தலைமையில் திருவத்திபுரம் திராவிடக் கழகத் தலைவர் தோழர் சி. வெ. சுப்பராயன் அவர்கள் மகள் தோழியர் அன்னபூரணி அவர்களும், காஞ்சிபுரம் தோழர் எஸ். தாமோதரன் அவர்கள் மகன் தோழர் ராஜாராமன் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதுசமயம் தளபதி அண்ணாதுரை அவர்களும், என். வி. எம். அண்ணாமலை, எம். கந்தசாமி, பாலசுப்ரமணியம் ஆகிய தோழர்களும் திருமணம் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். குடியரசு வளர்ச்சிக்காக இரண்டு ரூபாய் நன்கொடை யளிக்கப்பட்டது.

## போர்வாள் நாடகம்

மாயவரம் சங்கீத சபாவில், திராவிடநாட்டின் சிறந்த நடிகரான தோழர் எம். ஆர். ராதா அவர்களை அமைப்பாளராகக்கொண்ட டி. எம். எம். நாடக சபையினரால் 31-8-46 சனிக்கிழமை முதல் தோழர் எம். ஆர். ராதா அவர்களும், தோழியர் எம். ஆர். மங்களம் அவர்களும் நடிக்கும் "போர்வாள்" என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெற்று வருகின்றது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்கி ஆள முடிகின்றது. இந்த செல்வப் பெருக்கால்தான் அரசுபுரியும் சிறுபான்மை மக்களிடத்தில், ஏகாதிபத்திய அரசை நடத்தும் அதிகாரம் இருந்து வருகிறது. இந்த பொருளாதார செல்வாக்கைக் கொண்டுதான், இச்சிறுபான்மையோர், மற்ற பெரும்பான்மையோரை, அடக்கி ஆள சாத்தியப் படுகின்றது. இந்த நிலைமை, காங்கரஸ் சுயராஜ்யத்தில் மாறுமாவென்று கேட்கின்றோம்? புலியும் பசுவும் ஓர் துறையில் நீர் அருந்ினாலும் அருந்தும்; ஆனால் முதலாளியும் தொழிலாளியும் சரிசமத்துவமாக தங்கள் தேச பொருள்களைக் காந்தியார் சுயராஜ்யத்தில் அனுபவிப்பார்கள் என்பது பகற்கனவே. தனது சுயராஜ்யத்தில், தொழிலாளிக்கு, முதலாளி தர்மகர்த்தர்களாக இருக்கவேண்டுமாம்! முதலாளியைத் தொழிலாளி பணிந்து நடக்க வேண்டுமாம்!! முதலாளியைத் தொழிலாளி எதிர்க்கக் கூடாதாம்!!! தொழிலாளி பொருளாளியாகக் கோரக் கூடாதாம்!!!! இம்மாதிரியாக நண்டைச் சுட்டு,நரியைக் காவைக்கும் தரும நீதியைத்தான் பொருளாளி இனத்தோர் மரபில் வந்தவராகிய காந்தியார் இந்தியாவில் வாழும் 40 கோடி இந்திய மக்களுக்குப்போதித்து வருகின்றார்!!!!! இந்த தரும நீதிதான், காங்கரஸ் பர்டோலி திட்டத்திலும் வற்புறுத்தப்பட்டுள்ளது. காந்தியார் சுயராஜ்யத்தில், முதலாளிகள் தொழிலாளிகளுக்கு டிரஸ்டிகளாக இருக்க வேண்டுமென்றால், மற்ற தேசிய சுயராஜ்யங்களுக்கும், காந்தியார் சுயராஜ்யத்திற்கும் என்ன வித்தியாசம்? ஆங்கில நாட்டில் பால்டுவினும், மெக்டனால்டும், 4கோடி ஆங்கில மக்களுக்கு டிரஸ்டிகளாகவே இருந்தது போல இந்திய நாட்டிலும் காந்தியார் தர்ம ராஜ்யத்தின்படி, ஜவஹர்லால்நேரு 40-கோடி இந்திய மக்களுக்கு டிரஸ்டியாக இருக்கப்போகின்றார். இந்நயத்தில் தற்போதுள்ள மேல்நாட்டு சுயராஜ்யத்தைவிட்டு, நமது நாட்டு காந்தியார் சுயராஜ்யத்தைக் கோருவானேன்?

### சுயராஜ்யமும் தனிச்சொத்து உரிமையும்

இந்தத் தனிச் சொத்துரிமை காரச்சி காங்கரசிலும் வற்புறுத்தப்பட்டது: எல்லா தேசிய இராஜ்யங்களிலும்,தனிச்சொத்துரிமைப் பாதுகாக்கப்படும். காந்தியார் சுயராஜ்ய திட்டத்திலும் முக்கியமாக தனி சொத்துரிமைப் பாதுகாக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் திட்டத்திலும் (The new Constitution) தனி சொத்து உரிமை பாதுகாக்கும்படித் திட்டமேற்பட்டுள்ளது. புதிய குடிஅரசுகளாகக் கருதப்பட்ட ஜெர்மனி (Germany), போலந்து (Poland), துருக்கி (Turkey) முதலிய தேசிய அரசுகளில் தனி சொத்துஉரிமைக்குப் பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டன. இந்த பாதுகாப்பின் லட்சணம் என்னவெனில்,உலகம் இரண்டு வகுப்பாகப் பிரிந்திருக்கும் காட்சியே ஆகும். உடையவன், இல்லாதவன், என மனித கூட்டம் பிரிந்திருப்பதும், இந்த தனி சொத்து உரிமையால் நிகழ்ந்து வரும் வித்தியாசம் என அறிதல் வேண்டும். மகாராஜன், ஏழை என்று உலக மக்கள் பிரிந்து இருப்பதும், இந்த பொருளாதார வித்தியாசத்தினால்தான் என அறிக. எஜமான், வேலைக்காரன் என்ற வித்தியாசமும், முதலாளி, தொழிலாளி என்ற வித்தியாசமும். சுதந்திரக்காரன் (Freeman), அடிமை (Slave) என்னும் வித்தியாசமும் மக்களுக்குள் ஏற்பட்ட காரணம் என்னவெனில், சிலரிடம் பொருள் தங்குவதாலும், பலரிடத்தில் ஒன்றும் இல்லாமையாலும் என அறிக.

### பொருளாதார வித்தியாசம்

இந்தப் பொருளாதார வித்தியாசம் (Economic inequality) ஆதிகாலம் தொடங்கியே நீடித்து வந்துளது. ராமராஜ்யத்திலும், தசரத ராஜ்யத்திலும், துரியோதன பாண்டவர் ராஜ்யத்திலும் இந்த பொருளாதார வித்தியாசம் இருந்தே வந்தது. இன்றைக்கும், பிரிட்டிஷ் முதலிய சுயராஜ்யங்களிலும், இருந்தே வருகின்றது. நாளைக்கும் காந்தியார் சுயராஜ்யத்தில் இருந்தே வரப்போகின்றது. இதற்கு என்ன தடை? தனி சொத்துரிமை (Individual Ownership) பாதுகாக்கப்படும் வரை, சிலரிடத்தே பொருள் தங்கும். பலர் பட்டினிகிடக்க வேண்டியதே. தண்ணீர் பள்ளத்தை நோக்குவதைப்போல், செல்வம் பணம் படைத்த சிலரிடத்தே சென்று குவியும். இல்லாமை, அதாவது, வறுமை, ஏழை மக்களிடம்தான் தங்கும். இந்தக் கொடிய திட்டத்தை மாற்றி, யாவரும் தனது சுயராஜ்யத்தில்,சொத்துரிமையைப் பெற, நமது காந்தியார் ஒரு சொல்லேனும் சொல்லவில்லை. கதரை ஆதரியுங்கள், தீண்டாதாரைக் கோவிலில் விடுங்கள் என்று உபதேசிக்கின்றார். ஆனால் கதரால், அதாவது சுதேசியத்தால், சிலர் மாத்திரம் பணக்காரர்களாகும் பொருளாதாரத்திட்டத்தை (Economic Law) உணர்ந்தாரில்லை. கோவிலில் 7-கோடி தீண்டாதாரை விடவேண்டும், அல்லாவிடில் பட்டினிகிடந்து சாவேன் என்று பயமுறுத்தினாரே.

யொழிய, அந்த 7-கோடி பஞ்சமர்கள் நிலமில்லாமல், நீரில்லாமல், குடிக்க கஞ்சியில்லாமல் சாகின்றகொடுமைகளைக் கவனித்தாரில்லை. மற்ற தேசியநாடுகளில் உள்ள மகாராஜனும், ஏழையும், உடையவனும், (Haves), இல்லாதவனும் (Have nots), முதலாளியும், தொழிலாளியும், சிலரிடம் செல்வப்பெருக்கும், பலரிடம் தரித்திரமும், சிலரிடம் வீண் செலவும் (Waste) பலரிடம் சிக்கனமும் (Economy), இருந்து வருவதைப் போல், இந்திய சுயராஜ்யத்திலும் இருக்குமாகையால், நமது சுயராஜ்யத்தின் விசேடமென்ன?

இந்தப்பொருளாதாரவேற்றுமை யுள்ளவரை எந்த அரசாயினும் சரி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம் என்பதெல்லாம் பொய்ப்பேச்சு: உடையவனுடைய பொருளைக் காப்பதற்குத்தான், எல்லா போலீசும், எல்லா [illegible], எல்லா சேனை சிப்பந்திகளும் ஏற்பட்டுள்ளன. ஆனால், இல்லாதவனுடைய வறுமையைப் போக்க, எந்த நியாயம், எந்த சட்டம், எந்த அரசு ஏற்பட்டுள்ளது? இனி வரும் சுயராஜ்யத்தில் தினம் ஒன்றுக்கு ராட்டினத்தைச்சுற்றி 5-பைசா சம்பாதியுங்களென திட்டமிடப் போகிறார்கள். இந்த 5-பைசாவைக்கொண்டு ஒருவன் உண்ண உணவும், உடுக்க ஆடையும், இருக்க வீடும், கற்க கல்வியும், தனக்கும், தன் மனைவி குழந்தைகளுக்கும் தேடிக்கொள்ளவேண்டும்! இதுதான் நமக்கு காந்தியார் கொண்டுவரும் பெரும் சுயராஜ்யத்தில் இடப்போகும் நன்கொடை. ஆனால், அந்த சுயராஜ்யத்தில் ஒருவனிடம் இருக்கும் நவரத்தினமிழைத்த நகைகளையும், பங்களாக்களையும், தோட்டம் துறவுகளையும், ரத்தன கம்பளிகளையும், நாற்காலி, மேஜை, சோபாக்களையும், வீடு வாசல்களையும், மோட்டார்கார்களையும், தாசி வேசிகளையும், குடி கூத்திகளையும் தொடப்படாதாம்! அசைக்கப்படாதாம்!! இந்த நிலைமைதான் நமது சுயராஜ்யத்தில் காக்கப்படுமென்று காங்கரஸ் அரசியல் திட்டத்தில் செய்துள்ளது!!! இப்படிப்பட்ட சுயாராஜ்யத்தைவிட, சுடுகாடே மேலென்பதற்கு என்ன தடை?

இந்தப் பொருளாதார வித்தியாசத்தால், தொழிலாளிக்குத் தொழில் நிச்சயம் (Security of Service) இல்லாமல் போகின்றது. போதுமான வருமானமும் (Living Wage) இல்லாமற் போகின்றது. தற்கால உலகப் பொருளாதாரத்திட்டத்தில் (Current Economic System) தொழில் நிச்சயமும் போதுமான வருமானமும், கிடைக்கப்போவதில்லை. இந்த திட்டத்தை அனுசரித்துவரும் தேசிய ராஜ்யங்களில் (Nationalist Governments) இம்மூன்று பொருளாதாரச் செல்வாக்கும் (Economic Advantageous) தொழிலாளிக்குக் கிடைக்காமலிருக்க, நமது இந்திய சுயராஜ்யத்தில் மாத்திரம் எப்படி கிடைக்கும்? தனி சொத்துரிமையோடு இணைபிரியாமலிருப்பது, பொருளாதார அடிமைத்தனமொன்றே. இந்த அடிமைத்தனம் நீங்கினாலொழிய, தொழிலாளிக்கு வேலை நிச்சயம் ஏற்படப்போவதில்லை. உண்ண போதுமான உணவும் அகப்படப் போவதில்லை. உண்ண உணவும், வேலை நிச்சயமும், இவ்விரண்டும் கிடைக்காத சுயராஜ்யம் எதற்கென்ன? வாராதிருந்தாலென்ன? இந்தசந்தர்ப்பத்தில் தொழிலாளரும் விவசாயிகளும் மற்றுமுள்ள பொதுஜனங்களும் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், இந்தப் பொருளாதார அடிமைத் தனத்தை (Economic Slavery) நீக்க ஒரு வார்த்தைகூட காந்தியார் சொல்லவில்லை. 'கதர்' 'கோவில் பிரவேசம்' 'தீண்டாமை' 'தர்மகர்த்தர்கள்' என்று இந்த சொற்களைத்தான் பல்லவியாகப் பாடிவருகின்றார். இச்சொற்களால் தான், இவரைச் சுற்றியுள்ள முதலாளிகளும், வர்த்தகர்களும் பணக்காரர்களும், பார்ப்பனர்களும் இவரை மதித்து வருகின்றார்கள். இச்சொற்களால் தான் அவருக்குள்ள எல்லா செல்வாக்கும் மதிப்பும். மேலே குறிப்பிட்ட பூச்சாண்டி சொற்களை விட்டு விட்டு, வேலை நிச்சயம், போதுமான உணவு முதலிய பொருளாதார பாடலை பாடுவாரேயானால் இவருக்குத் தற்போதுள்ள தேச மதிப்பும், செல்வாக்கும், ஒரு நிமிஷத்தில் பறந்துபோகுமென அறிக.

சுருங்கக் கூறுமிடத்து, காந்தியார் சுயராஜ்யத்தில் தனி உடமை ஆதரிக்கப்படும், அதில் அடங்கியுள்ள பொருளாதார அடிமைத்தனமும் நிலைத்து வரும். தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும், உண்ண போதுமான உணவு இல்லாமை, இன்றைக்கு இருந்தவாறே இருந்து வரும். தோழர்களே! இந்த சுயராஜ்யமா வேண்டுமென் கேட்கின்றேன்? ஏனெனில், காந்தி ராஜ்யத்தில் தற்போதுள்ள நிலைமையாகிய பொருளாதார வித்தியாசமே நிலைத்து வரப்போகின்றது. ஆயிரம் பதினாயிரம் பேர்கள் மாத்திரம் எல்லா நிலங்களையும், நீர்களையும் (Waters) தொழிற்சாலைகளையும், ரயில்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.